மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.302/2017</u>

2025ம் ஆண்டு டிசம்பர் 01ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமாரசாமிக்கவுண்டர் | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>01.12.2025 பி.வா.சா.1 சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை</u>

1. 05.05.1960 தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் – பி.வா.சா.ஆ.1
2. 16.05.1977 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் சான்றிட்ட நகல் –பி.வா.சா.ஆ.2
3. 28.11.2025 தேதியிட்ட ரீ.சஎண்.45/1க்கான பட்டா மற்றும் புல வரைபடம் கணினி நகல் –பி.வா.சா.ஆ.3
4. 28.11.2025 தேதியிட்ட ரீ.சஎண்.45/1க்கான அ பதிவேடு கணினி நகல்–பி.வா.சா.ஆ.4
5. 28.11.2025 தேதியிட்ட ரீ.சஎண்.45/3க்கான பட்டா மற்றும் புல வரைபடம் கணினி நகல் –பி.வா.சா.ஆ.5
6. 28.11.2025 தேதியிட்ட ரீ.சஎண்.45/3க்கான அ பதிவேடு கணினி நகல் –பி.வா.சா.ஆ.6
7. 28.11.2025 தேதியிட்ட ரீ.சஎண்.45/4க்கான பட்டா மற்றும் புல வரைபடம் கணினி நகல் –பி.வா.சா.ஆ.7
8. 28.11.2025 தேதியிட்ட ரீ.சஎண்.45/4க்கான அ பதிவேடு கணினி நகல் –பி.வா.சா.ஆ.8

9. 28.11.2025 தேதியிட்ட ரீ.சஎண்.45/5 க்கான பட்டா மற்றும் புல வரைபடம் கணினி நகல் –பி.வா.சா.ஆ.9

10. 28.11.2025 தேதியிட்ட ரீ.சஎண்.45/5 க்கான அ பதிவேடு கணினி நகல் –பி.வா.சா.ஆ.10

11. 28.11.2025 தேதியிட்ட ரீ.சஎண்.45/8 க்கான பட்டா மற்றும் புல வரைபடம் கணினி நகல்– பி.வா.சா.ஆ.11

12 28.11.2025 தேதியிட்ட ரீ.சஎண்.45/1 க்கான அ பதிவேடு கணினி நகல் – பி.வா.சா.ஆ.12

13. 28.11.2025 தேதியிட்ட ரீ.சஎண்.47/1 க்கான பட்டா மற்றும் புல வரைபடம் கணினி நகல்– பி.வா.சா.ஆ.13

14. 28.11.2025 தேதியிட்ட ரீ.சஎண்.47/1 க்கான அ பதிவேடு கணினி நகல்– பி.வா.சா.ஆ.14

15 04.01.2018 தேதியிட்ட புல எண்.45 க்கான புல வரைபடம் உண்மை நகல் – பி.வா.சா.ஆ.15

16. 04.01.2018 தேதியிட்ட புல எண்.47 க்கான புல வரைபடம் உண்மை நகல்– பி.வா.சா.ஆ.16

17. 28.11.2025 தேதியிட்ட புல எண்.45 க்கான புல வரைபடம் கணினி நகல்– பி.வா.சா.ஆ.17

18. 28.11.2025 தேதியிட்ட புல எண்.47 க்கான புல வரைபடம் கணினி நகல்– பி.வா.சா.ஆ.18

19. 20.11.2025 தேதியிட்ட புல எண்.45 க்கான அடங்கல் உண்மை நகல்– பி.வா.சா.ஆ.19

20. 20.11.2025 தேதியிட்ட புல எண்.47 க்கான அடங்கல் உண்மை நகல் – பி.வா.சா.ஆ.20

தாவாவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் இந்த வழக்கில் 5 வது பிரதிவாதி என்றால் சரிதான். வாதி நாங்கள் காலை எண்.45 இல் உள்ள வாதியின் தடபத்தியத்தை இடைஞ்சல் செய்வதாக சொல்லி தான் இந்த வழக்கை தாக்கல்

செய்துள்ளார் என்றால் ஆமாம். மேற்படி நடத்தை பொறுத்து நாங்கள் வாதியை எவ்வித இடைஞ்சலும் செய்யவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கு பின்னிட்ட நீதிமன்ற ஆணையர் தாவா சொத்துக்களை வந்து பார்வையிட்டார் என்றால் சரிதான். அது சம்பந்தமாக அறிக்கை மற்றும் வரைபடம் ஆகியவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது சம்பந்தமாக நான் எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம்.

2. நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கை மற்றும் வரைபடத்தில் தாவா தடத்தில் எனது பாகத்தில் தென்னை மட்டைகள் போட்டு நான் தடத்தை குறுக்காட்டி உள்ளதாக நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கை மற்றும் வரைபடத்தில் சொல்லி உள்ளார் என்றால் சரியல்ல. அது வேறு மூன்றாம் நபர்கள் போட்டு வைத்தது நான் எதுவும் தாவா தடத்தில் பொருட்களை போடவில்லை. 45ம் எண் காலையில் எனக்கும், வாதிக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் தவிர வேறு யாருக்கும் எவ்வித பாத்தியமும் இல்லை என்றால் ஆமாம்.

3. நீதிமன்ற ஆணையர் தனது வரைபடத்தில் தாவா தடத்தின் தெற்கோட்டில் புதிதாககற்கள் நடப்பட்டுள்ளதாக காண்பித்துள்ளார் என்றால் நான் எனது பூமியின் அத்தில் கற்களை நட்டு உள்ளேன் அந்த கற்களை நட்டதால் தான் எனக்கும், வாதிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு இந்த வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு எனது தரப்பில் ஆட்சேபனைகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் ஆமாம்.

4. காலை எண்.45 ஆதியில் ராமசாமி கவுண்டர் மக்கள் ராமசாமி கவுண்டர் பழனிசாமி கவுண்டர் ஆறுச்சாமி கவுண்டர் மற்றும் கோவிந்தசாமி கவுண்டர் என்பவரின் மகன் பொன்னுசாமி கவுண்டர் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் ஆமாம். 16.05.1977 அன்று மேற்படியார்கள் தங்களுக்குள் ஒரு பாகப்பிரிவினை ஆவணம் காலை எண்.45 பொறுத்து ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால் சரிதான். அதில் ராமசாமி கவுண்டர் என்பவருக்கு ஏ அட்டவணை சொத்துக்களும், பழனிச்சாமி கவுண்டர் என்பவருக்கு பி அட்டவணை சொத்துக்களும் ஆறுச்சாமி என்பவருக்கு அட்டவணை சொத்துகளும் பொன்னுசாமிக்கு டி அட்டவணை சொத்துக்களும் பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

5. அந்த பத்திரத்தை படித்து பார்த்து அதில் உள்ள விவரங்களை நான் தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். ஏ அட்டவணை சொத்துக்கள் ஒதுக்கப்பட்ட ராமசாமி கவுண்டர் என்பவருக்கு வேலுச்சாமி என்ற ஒரு மகன் இருந்து அவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அந்த வேலுச்சாமிக்கு தெய்வசிகாமணி மற்றும் சொர்ணாத்தாள் ஆகியோர்கள் தான் வாரிசுகள் என்றால் ஆமாம். மேற்படி தெய்வசிகாமணி என்பவர் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். மேற்படி தெய்வசிகாமணி என்பவருக்கு 2,3 பிரதிவாதிகள் தான் வாரிசுகள் என்றால் சரிதான். பி அட்டவணை சொத்துக்கள் ஒதுக்கப்பட்ஒரு பழனிச்சாமி என்பவருக்கு 4ம் பிரதிவாதி ரங்கசாமி கவுண்டர் என்பவர் தான் வாரிசு என்றால் சரிதான்.

6. சி அட்டவணை சொத்துக்கள் ஒதுக்கப்பட்ட ஆறுசாமி என்பவருக்கு நான் மட்டும்தான் வாரிசு என்றால் சரிதான். 1977 பாகக்கறார் ஆவணம் பழைய க.ச.எண்.119 ல் எனக்கு 43 சென்ட் நிலம் ஒரு பாகமாகவும், 98 சென்ட் நிலம் ஒரு பாகமாகவும் பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகங்களுக்கு அதே எண் காலையில் தெற்கோட்டில் கிழமேலாக உள்ள உரம்பு வாய்க்கால் போது வண்டி தட ஏரி ஏபிசிடி ஷெட்யூல் பங்கிற்கும் தெற்கு தென்வடல் வண்டி பாதைக்கும் மேற்கு 120 ஆம் நம்பர் காலைக்கும் வடக்கு 117 ஆம் நம்பர் காலைக்கும் கிழக்கு இதன் மத்தியில் புஞ்சை ஏக்கர் 40 சென்ட் இதில் பொதுவில் 4 ல்1 பங்கு பத்து சென்ட் என சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

7. ஏரிக்கு வடபுறம் பள்ளத்தில் 40 சென்ட் எனக்கு கொடுக்கப்பட்டுள்ளது.பின்னும் மேற்படி காலையில் வடக்கோட்டில் பொது கிணறு தடத்திற்கு செக்குபந்தி 93 ஆம் நம்பர் காலைக்கும் தெற்கு, க.ச.எண்.122 தென்வடல் வண்டி தடத்திற்கும் மேற்கு. பி சி டி ஷெட்யூல் தாரர்களின் தொண்டு பட்டி இடங்களுக்கு வடக்கு, டி ஷெட்யூல்தாரரின் 98 சென்ட் பூமிக்கும் கிழக்கு, இதன் மத்தியில் புஞ்சை ஏக்கர் 0.32 இதில் பொதுவில் 8 ல் 5 பங்கு புஞ்சை ஏக்கர் 0.20 இதில் பொதுவில் 4 ல் 1 பங்கு 0.05 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் தான் நாளது வரை நாங்கள் சொத்துக்களை அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான்.

8. மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தில் எனது தகப்பனாருக்கு பாகம் ஒதுக்கப்பட்ட சி அட்டவணை சொத்துக்களில் கண்டுள்ளவாறு தான் மற்ற பாகஸ்தர்களுக்கும் சொத்துக்களும், பொதுத்தடங்களும் பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலை எண்.119 காலை தான் தற்போது ரீசர்வையில் 45 ஆக மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி காலையில் உள்ள தடத்தைப் பொறுத்துதான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். ரீ.ச.எண் 47/1ல் உள்ள தடத்தை பொறுத்து வாதி எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் இந்த வழக்கை அந்த தடத்தை கேட்டு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

9. நான் சொல்வது போல் ரீ.ச.எண் 47/1ல் உள்ள தடத்தை பொறுத்து வாதி எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1977 பாகப்பிரிவினையில் டி அட்டவணை சொத்துக்களாக ஒரு பொன்னுசாமி கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை பொன்னுசாமி கவுண்டர் சிவகாமி என்பவரிடமிருந்து ஒரு காளியப்ப கவுண்டர் மகன் பொன்னுசாமி என்பவர் 1987 இல் கிரயம் வாங்கினார் என்றால் ஆமாம். 2003 ஆம் ஆண்டு வாதி சண்முகம் பொன்னுசாமி என்பவரிடமிருந்து கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான்.

10. கிரைய தேதியில் இருந்து வாதி தாவா தடம் வழியாகத்தான் தனது பூமிக்கு ஆடு, மாடுகள், வண்டி வாகனங்கள், கொண்டு சென்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் 45 இல் உள்ள தடத்தில் தான் வாதி சென்று வருகிறார் 45 ஆம் நம்பர் காலையில் வடகிழக்கு மூலையில் கிணறு மற்றும் பொது இடம் உள்ளது என்றால் ஆமாம்.

அந்த கிணற்றிற்கு தென்புறம்  வாதிக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த வாதி வீட்டிற்கு மேல் புறம் எனக்கும் நாலாம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட வீடுகள் உள்ளது என்றால் சரிதான் எனது வீட்டிற்கு மேல் புறம் 1 முதல் 3 பிரதிவாதிகளின் வீடுகள் அமைந்துள்ளது என்றால் ஆமாம்.

11. எங்கள் அனைவரின் வீட்டிற்கு மேல் புறமாக வாதிக்கு பாத்தியப்பட்ட பாகம் உள்ளது என்றால் சரிதான். வாதி பாகத்திற்கு அடுத்ததாக 4ம் பிரதிவாதிக்கு பாதிக்கப்பட்ட பூமி அமைந்துள்ளது என்றால் சரிதான். நாலாம் பிரதிவாதி பூமிக்கு அடுத்தார் போல் எனது பாகம் உள்ளது என்றால் சரிதான். அதற்கு அடுத்து ஒன்று முதல் மூன்று பிரதிவாதிகளின் பூமிகள் உள்ளது என்றால் சரிதான். அந்த ஒன்று முதல் மூன்று பிரதிவாதிகள்  பாகத்திற்கு அடுத்து வாதியின் பாகம் உள்ளது என்றால் சரிதான்.

12. பொது கிணறு இடத்திலிருந்து எங்கள் பாகங்களின் வடக்கோட்டில் ஆறு அடி அகல தடமானது மேற்க்கோடு வரை செல்கிறது என்றால் சரிதான். அந்த தடம் மேற்க்கோடு வரை சென்று வடக்கே 44/1 காலையில் 4ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட பூமி வரை செல்கிறது என்றால் சரிதான். அந்தத் தடம் தெற்கே வாதி பூமிக்கு மேல் புறத்தில் 12 அடி அகலத்தில் தெற்கே வருகிறது என்றால் சரிதான். தெற்கே வந்து அந்த தடம் காலை எண். 47/1 இல் உள்ள 7–1/2 சென்ட் நிலத்தை சுற்றி வந்து மீண்டும் கிழக்கே ரோடு வரை வருகிறது என்றால் சரிதான்.

13. அந்த கிழக்கே வரும் தடம்தான் ஏரி மேல் வருகிறது என்றால் அங்கு ஏரியே கிடையாது. காலை எண்.45 க்கு மேல் புறம் 50 ம் நம்பர் காலையில் எனக்கும், வாதி மற்றும் மற்ற பாகஸ்தர்களுக்கு பாத்தியப்பட்ட பொது கிணறு உள்ளது என்றால் ஆமாம். அந்த கிணற்றிற்கு 40 சென்ட் பூமி வழியாகத்தான் வண்டி வாகனங்கள் ஒட்டி சென்று நடந்து சென்றும் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். அந்த 45 நம்பர் காலையின் தெற்கோட்டில் ஏரி உள்ளது என்றால் பள்ளம் தான் உள்ளது. இந்த வழக்கில் நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையோடு ஒரு வரைபடத்தை தாக்கல் செய்து உள்ளோம் என்றால் சரிதான்.

14. அந்த வரைபடத்தில் நான் சொல்வது போல் காலை எண்.47 இல் தடமோ பள்ளமோ உள்ளதாக குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. 47 காலைக்கு மேல் புறம் எனக்கு பங்கு எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஏரி மீது தடமுள்ளதாக எந்த வாசகமும் கண்டு எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் செக் பந்தியில் ஏரி மேட்டு வேலிக்கு தெற்கு என கண்டு தான் கிரயம் தரப்பட்டுள்ளது என்றும் ஏரி மீது தடம் உள்ளதாக குறிப்பிட்ட எதுவும் சொல்லப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

15. 1960 ஆம் ஆண்டு கிரயம் வாங்கியதற்கு பின்னிட்டு ஏரிக்கு தென்புறம் உள்ள 47 ஆம் நம்பர் காலையில் நாளது தேதி வரை பொதுத்தடம், பொது இடம் ஏற்படுத்தி பாகப்பிரிவினை எதுவும் செய்து

கொள்ள வில்லை என்றால் சரியல்ல. பாகம் செய்து கொண்டுள்ளோம். அவ்வாறு பாகப்பிரிவினை செய்து கொண்டதாக நான் நீதிமன்றத்தில் ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல நான் சொல்வது போல் 47 ம் எண் காலையில் ஏரி எதுவும் இல்லை என்றும் ஏரிக்கு தெற்கு என கண்டு தான் நாங்கள் செக்குபந்தி கண்டு கிரயம் வாங்கியுள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல.

16. ஏரி மற்றும் நான் சொல்லும் ஏரி மீது உள்ள தடம் ஆனது எவ்வளவு காலமாக நிலையில் இருந்து வருகிறது என்றால் என் தாத்தா காலத்தில் இருந்து உள்ளது. அதை தவிர வேறு தடம் எதுவும் இல்லை என்றால் 47 ஆம் நம்பர் காலையில் அந்த தடம் மட்டும் தான் உள்ளது நீதிமன்ற ஆணையர் தாவா சொத்துக்களை அளவீடு செய்த போது நானும் உடன் இருந்தேன் என்றால் சரிதான். அது சம்பந்தமாக தாக்கல் செய்துள்ள நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் கண்டுள்ள விவரங்கள் சரியானதுதான் என்றால் ஆமாம். அது சம்பந்தமாக எனக்கு ஆட்சேபனைகள் எதுவும் இல்லை என்றால் ஆமாம் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் ஏரி தடத்திற்கு வடபுறம் உரம்பு வாய்க்கால் செல்வதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

17. அந்த உரம்பு வாய்க்காலுக்கு பக்கத்தில் ஆறு பெரிய வாகை மரங்களும் மற்றும் வேப்ப மரங்களும் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் தடம் மேடாக ஏரியின் மேல் செல்கிறது என்றும், இருபுறமும் உள்ள பூமிகள் பள்ளமாக இருந்தது என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தடம் ஏரி மீது மேற்கோடு போய் கொஞ்சம் தெற்கே திரும்பி வந்து

மீண்டும் மேற்கே செல்வதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நேர்கோட்டில் சென்று பின் வடகோடு வரை செல்வதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தடத்தை தவிர வேறு தடம் இருப்பதாக ஆணையர் தனது அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பள்ளத்தில் தடம் உள்ளது என்பதை காண்பிக்க நான் எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

18. தாவா தடமானது ஆதி காலத்தில் இருந்தே ஏரியின் மீது தான் உள்ளது என்றும் வாதியின் பாகம் எங்கள் பாகத்திற்கு பின்னால் உள்ளதால் தடத்தை இடையூறு செய்து வாதியின் பாகத்தை மோசடியாக அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கில் நாங்கள் பொய்யாக எதிர்வாதம் செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. 45 ஆம் என் காலைக்குள் எனக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் உள்ள சொத்துக்கள் பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், வெளியில் இருந்து 45 நெம்பர் காலையில் வாதி சொத்துக்களை கிரயம் பெற்று வந்ததால் வாதியை இடையூறு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தாவா தடத்தை இடையூறு செய்கிறோம் என்று சொன்னால் சரியல்ல.

19. எதிர்வழக்குறையில் நாங்கள் சொல்லி உள்ளது போல் 47 ஆம் எண் காலையில் தடம் உள்ளது என்பதை காட்டுவதற்கு நாங்கள் எதிர் ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வளக்குறை வரைபடத்திலேயே காலை எண்.47 இல் தடம் உள்ளதை பொறுத்து

குறிப்பிட்ட எதுவும் காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. 47 ஆம் நம்பர் காலையில் தடம் எதுவும் நிலையில் இல்லை என்றும் எனவே எதிர்வழக்குரையில் நாங்கள் கேட்டுள்ள பரிகாரங்கள் எதுவும் எங்களுக்கு கிடைத்தது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. வாதி கேட்டுள்ளவாறு தாவாவில் கண்டுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றும் நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிருரை கோரிக்கை தள்ளுபடியாகத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

ஒம்/–திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்.